2012 ஏப்ரல் 19]
124—

நியாய விலைக் கடை

***1171—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, புத்தகரம் ஊராட்சி, காரைத்திடல் கிராமத்திற்குப் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, புத்தகரம் ஊராட்சி, புத்தகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் புத்தகரம் தாய் நியாய விலைக் கடை, காரைத்திடல் பகுதியில் 92 குடும்ப அட்டைகளைச் சேர்த்து மொத்தம் 497 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசின் நிபந்தனைகளின்படி, உத்தேச பகுதிநேரக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், பகுதிநேரக் கடை திறக்கப்பட்டபின், தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். எனினும், காரைத்திடல் கிராம மக்களின் கோரிக்கையினை சிறப்பினமாகக் கருதி, மேற்படி நிபந்தனைகளைத் தளர்வு செய்து, அனுமதி வழங்கக் கோரி திருவாரூர் மண்டல இணைப் பதிவாளரால் உணவுப் பொருள் வழங்கல் துறைக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது. ஆனால், இந்த முன்மொழிவு மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யாததால், மறுபரிசீலனை செய்யக் கோரி மண்டல இணைப் பதிவாளருக்கு திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது காரைத்திடல் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பதற்கான வாய்ப்பு இல்லை. காரைத்திடல் பகுதியிலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் புத்தகரம் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தங்குதடையின்றி பெற்றுக்கொள்ளலாம்.

[2012 ஏப்ரல் 19

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், புத்தகரம் ஊராட்சியைச் சேர்ந்த காரைத்திடல் கிராம மக்கள் உணவுப் பொருட்களை வாங்க சுமார் 4 கி.மீ. தூரம் சென்று, புத்தகரம் அங்காடியில் வாங்க வேண்டிய நிலை இருந்தது. எனவே, அங்கே ஒரு பகுதிநேர அங்காடி திறக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்தபோது, அங்கே ஒரு பகுதிநேர அங்காடி திறக்கப்பட இருக்கிறது. ஆகவே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதோடுமட்டுமல்ல; திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆதரங்கம் ஊராட்சியில் உள்ள தர்க்கா கிராமத்தில் பகுதிநேர அங்காடி வேண்டும் என்று கோரிக்கை வந்திருக்கிறது. அங்கே வட்ட வழங்கல் அலுவலர்கள் சென்று ஆய்வு செய்து, பகுதிநேர அங்காடி திறப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து இருக்கிறார்கள். ஆகவே, ஆதரங்கம் ஊராட்சிக்குட்பட்ட தர்க்கா பள்ளிவாசல் தெருவில் ஒரு பகுதிநேர அங்காடி திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நியாய விலைக் கடை திறக்க இருக்கின்ற நிபந்தனைகள் ஏற்கெனவே பலமுறை இம்மாமன்றத்திலே தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன.*

தாய்க் கடைக்கும், அமைகிற பகுதிநேரக் கடைக்கும் 1½ கி.மீ தூரம் இருக்க வேண்டும். மலைப் பகுதியாக இருந்தால் 1 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். அதேநேரத்தில், பகுதிநேரக் கடை திறப்பதற்கு குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். அந்த 150 குடும்ப அட்டைகள் பிரித்த பிறகு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மலைப் பகுதியாக இருந்தால் 400 குடும்ப அட்டைகள் இருந்தால் போதும்.

2012 ஏப்ரல் 19]

அதோடு, இந்த பகுதிநேரக் கடையைப் பிரித்த பின்னர், நகர்ப்பகுதியாக இருந்தால் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று பலமுறை இம்மாமன்றத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதே கிராமப்புறங்களில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில், பகுதிநேரக் கடை அமைக்கின்றபோது, அந்தக் கடை அமைப்பதற்கான கட்டடம் வாடகை இல்லாமல் இலவசமாகக் கிடைக்க வேண்டும். இரண்டாவது, கொண்டு செல்கின்ற பொருட்கள், நகர்வு செய்கிற பொருட்களுக்குரிய வாடகை அதையும் அந்த ஊர் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், அந்தத் தாய்க் கடையில் பணிபுரியும் அதே பணியாளர்கள் அந்தப் பகுதிநேரக் கடையையும் திறக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, வாரத்திற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு மேல் அந்தக் கடையைத் திறப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, இதையும் கருத்தில் கொண்டு, அந்தக் கடை அமைகின்ற வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கின்றபோது, எந்த நியாய விலைக் கடை சங்கத்தால் நடத்தப்படுகிறதோ, அந்தச் சங்கம் அதை அமைத்துக் கொடுக்கும். இதற்கான கோரிக்கையை வட்ட வழங்கல் அலுவலரும், மண்டல இணைப் பதிவாளர் ஆகியோரிடம் ஊர்ஜிதம் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியைப் பெற்று அங்கேயே அமைத்துக்கொள்ளலாம். இதில், ஏதாவது குறையும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியையும், மண்டலப் பதிவாளர் அவர்களுடைய கோரிக்கையையும் வைத்து, உணவுத் துறை ஆணையாளருக்கு அனுப்புவார்களேயானால் அதன் பின்னர் அரசு முடிவு எடுத்து அந்தக் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

தூர் வாருதல்

***3731—திரு. எஸ். செந்தில்குமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—